# கல்வி அபிவிருத்தி வளநிலையம்

## வலயக்கல்வி அலுவலகம் வவுனியா தெற்கு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

| கணிதம் | தரம் : 07 | நேரம் : 2:00 மணி |
| --- | --- | --- |

பகுதி - I

- **எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.**

01) $\frac{64}{100}$ ஐ தசம எண்ணாக எழுதுக.


02) தீர்க்க. $3x + 4 = 19$

03) $a = 2$ ஆகும் போது $3a - 5$ இன் பெறுமானம் காண்க.


04) சுருக்குக. $2\frac{1}{2} - 1\frac{1}{3}$

05) $2\frac{5}{7}$ ஐ முறையில்லாப் பின்னமாகத் தருக.

06) பக்கங்களின் அடிப்படையில் எவ்வகையான முக்கோணி உருவில் காட்டப்பட்டுள்ளது.




07) நிழற்றப்பட்ட பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.



08) சுருக்குக. $0.854 \times 20$

09) 𝍸 𝍸 /// என்பதால் வகைக்குறிக்கப்படும் எண் யாது?



kalvi.lk

10) 3084g ஐ kgஇல் தருக.

11) 10 மாம்பழங்களின் விலை ரூபா 60 ஆயின் 5 மாம்பழங்களின் விலை யாது?

12) 64ஐ 4 இன் வலுவாக எழுதுக.

13) $\frac{3}{5} = \frac{9}{\square}$ இடைவெளியை நிரப்புக.

14) 36 இன் எல்லாக் காரணிகளையும் எழுதுக.

15) ஏறுவரிசையில் எழுதுக. 3.2, 4.1, 0.8, 0.74

16) சுருக்குக.

| | *l* | *ml* |
|---|---|---|
| | 4 | 000 |
| − | 2 | 050 |

17) சுருக்குக. 30 + 20 ÷ 5

18) 473 இன் இலக்கச்சுட்டி யாது?

19) சுருக்குக. (-8) + (+4)

20) விரிகோணம் ஒன்றை வரைந்து $A\hat{B}C$ என பெயரிடுக.

(20x2=40புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

* **விரும்பிய 5 வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) a) > அல்லது < குறியீட்டைப் பயன்படுத்தி இடைவெளியை நிரப்புக.

1. $\frac{1}{9}.....\frac{4}{9}$    2. $\frac{2}{5}.....\frac{2}{3}$    3. $\frac{1}{4}.....\frac{1}{3}$    4. $\frac{4}{5}.....\frac{3}{4}$

b) சுருக்குக. $\frac{3}{4}+3\frac{2}{3}-1\frac{1}{2}$

c) பெறுமானம் காண்க.
$0.735 \div 7$

02) 1. திணிவை அளக்கும் அலகுகள் 2 தருக.

2. சுருக்குக.

a)

| kg | g |
|---|---|
| 10 | 50 |
| x | 3 |


b) 10g 400mg ÷ 8

3. 50g திணிவுள்ள இனிப்பு 1g 250mg திணிவுள்ள பெட்டியினுள் அடைக்கப்பட்டு சந்தையில் விநியோகிக்கப்படுகிறது. அவ்வாறான 100 பெட்டிகளின் திணிவு யாது?


4. சத்துணவு 100g மாதிரி ஒன்றில் அடங்கியுள்ள போசணைக் கூறுகள் பின்வருமாறு.
புரதம் - 20g    இரும்பு 18g
கொழுப்பு - 7.8g    காபோவைதரேற்று 61.9g ஆகும்
எஞ்சியவை கல்சியம் ஆகும். சத்துணவில் கல்சியத்தின் திணிவு எத்தனை g எனக் காண்க.

03) i) 1kg கிழங்கின் விலை ரூபா x ஆகும். 500g கிழங்கையும் ரூபா y இற்கு ஒரு வல்லாரை கட்டும் வாங்குவதற்கு தேவையான மொத்தப் பணத்தை x, y இலான கோவையாக எழுதுக. [500g = ½kg]

ii) உருவிலுள்ள செவ்வகத்தின் சுற்றளவு 50cm ஆயின்




a) சுற்றளவுக்கான கோவையை x இன் சார்பில் எழுதுக.
b) சமன்பாடு ஒன்றை உருவாக்குவதன் மூலம் x ஐக் காண்க.
c) அதிலிருந்து செவ்வகத்தின் நீளம், அகலத்தைக் காண்க.

04) 


தரப்பட்டுள்ள உரு 10m பக்கநீளமுள்ள ஒரு சதுரவடிவ காணி ஆகும். இக்காணியைச் சுற்றி 2m அகலமுள்ள பாதை நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது.

i) பாதையுடன் காணியின் ஒருபக்க நீளம் யாது?
ii) பாதையுடன் காணியின் பரப்பளவைக் காண்க.
iii) காணியின் பரப்பளவு யாது?
iv) பாதையின் பரப்பளவு யாது? (நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு)



kalvi.lk

05) i) AB = 4cm ஆகுமாறு நேர்கோட்டு துண்டம் ஒன்றை வரைக.

ii) $A\hat{B}C = 60^0$ ஆகுமாறு பாகைமாணியைப் பயன்படுத்தி B இல் $60^0$ கோணத்தை அமைக்க.

iii) BC = 4cm ஆகுமாறு C என்னும் புள்ளியை குறிக்க.

iv) B ஐ மையமாகவும் BA ஐ ஆரயையாகவும் கொண்டு வட்டம் வரைக.

v) BC இன் சிறப்பு பெயர் யாது?

vi) CB ஐ நீட்டும் போது அது வட்டத்தை சந்திக்கும் புள்ளி D என பெயரிடுக.

vii) CD இன் சிறப்பு பெயர் யாது?

06) 1) 12, 18, 24 ஆகிய எண்களை முதன்மைக்காரணிகளின் பெருக்கமாக எழுதுக.

12 =

18 =

24 =

2) 12, 18, 24 ஆகிய எண்களின் பொதுக்காரணிகளில் பெரியதைக் காண்க.

3) 12, 18, 24 ஆகிய எண்களின் பொது மடங்குகளில் சிறியதைக் காண்க.

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION I PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457